






# திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில்
# சிற்ப, கட்டடக்கலைகள்


மேரி வினிபிரிடா. எஸ்

# திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில்
# சிற்ப, கட்டடக்கலைகள்

**மேரி வினிபிரிடா. எஸ்**

நல்லாயன் நிலையம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்)
திருநெல்வேலி, இலங்கை
2023

நூல் : திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சிற்ப, கட்டடக்கலைகள்
நூலாசிரியர் : மேரி வினிபிரிடா. எஸ்
விடயம் : கலை – சிற்பம் – கட்டடம்
முதற் பதிப்பு : 2023
உரிமை : ஆசிரியருக்கு
பக்கம் : xvi + 156
வெளியீடு : நல்லாயன் நிலையம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்)
திருநெல்வேலி, இலங்கை
அச்சுப்பதிப்பு : நியூ எவகிறீன் பிறின்டேர்ஸ் (Pvt) Ltd,
கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
விலை : ரூபா 1000/=
ISBN : 978-624-96945-7-6

Title : Sculpture and Architecture in the Old
Testament in the Bible
Author : Mary Winifreeda. S
Subject : Art - Sculpture - Architecture
First Edition : 2023
Copy Right : Author
Pages : xvi + 156
Publisher : Good Shepherd Centre
Catholic Chaplaincy of the University of Jaffna,
Thirunelvely, Sri Lanka .
Printer : New Evergreen Printers (Pvt) Ltd,
K.K.S Road, Jaffna.
Price : Rs. 1000/=
ISBN : 978-624-96945-7-6

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அணிந்துரை | | - | vii |
| முன்னுரை | | - | xiii |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | | - | xv |
| 1. | கலை: பொது அறிமுகம் | - | 1 |
| 2. | கிறிஸ்தவ சிற்பக்கலை: ஒரு வரலாற்றுப் பார்வை | - | 8 |
| 3. | கிறிஸ்தவக் கட்டடக்கலை: ஒரு வரலாற்றுப் பார்வை | - | 41 |
| 4. | திருவிவிலியத்தில் சிற்பக்கலை | - | 68 |
| 5. | திருவிவிலியத்தில் கட்டடக்கலை | - | 106 |
| உசாத்துணை நூல்கள் | | - | 149 |
| சொற்சுட்டி | | - | 154 |

# முன்னுரை

'கலை' என்பது மனித மனதிற்கு இன்பம் அளிக்கக்கூடியதும் கலைஞனின் உள்ளுணர்வை வெளிக்கொணரக் கூடியதுமான கருவி அல்லது ஊடகமாகும். "கலை இல்லாத சமயங்கள் இல்லை" எனக் கூறும் வகையில் சமயங்களின் வளர்ச்சியில் கலை பாரிய அங்கம் வகிக்கின்றது. கிறிஸ்தவத்தின் வளர்ச்சியிலும் கலையின் வகிபாகம் குறிப்பிடத்தக்கது. "திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சிற்ப, கட்டடக்கலைகள்" என்னும் தலைப்பில் அமைந்த இந்நூலானது திருவிவிலியத்தில் காணப்படும் சிற்ப, கட்டடக்கலை தொடர்பான குறிப்புக்களை எடுத்துரைப்பதாக அமையப்பெற்றுள்ளது. கட்டடக்கலை கலைகளுக்கெல்லாம் தாய்க் கலையாகும். ஆயினும், திருவிவிலியத்தில் காணக்கூடிய முதற்கலை சிற்பக்கலை என்பதும் இதில் குறிப்பிடத்தக்கது. திருவிவிலியத்தில் சிற்ப, கட்டடக்கலை என்னும் விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும்போது எபிரேய, கானானிய பின்னணிகளில் தோன்றிய சிற்ப, கட்டடக் கலைகளின் கலையம்சங்களை மட்டுமல்லாது, அம்மக்களைச் சூழ வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட கலையம்சங்களின் சிறப்புக்களையும் அறிய முடியும்.

கிறிஸ்தவ கலைகள் குறித்து ஆய்வுகளும் ஆய்வு நூல்களும் வெவ்வேறு வகைமைகளில் ஆங்கில மொழியில் வெளிவந்திருப்பினும் அவை குறித்த தமிழ் ஆய்வுகளும் நூல்களும் ஏனைய ஆதாரங்களும் மிகக் குறைவு என்றே கூற முடியும். அதிலும், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டை மட்டும் மையப்படுத்தி சிற்ப, கட்டடக்கலைகள் தொடர்பாக தமிழ் மொழியில் நூல் வடிவில் ஆதாரத்தைப் பெறுவது கடினம். இதனை உணர்ந்த நிலையில் இந்நூலை ஒரு ஆய்வு நூலாக வெளியிடத் துணிந்தேன். மேலும், தமிழ் மொழி மூலம் பல்கலைக் கழகங்களில்

கிறிஸ்தவ நாகரிகம், கிறிஸ்தவ கற்கைகள் போன்ற பாடங்களைக் கற்கும் மாணவர்களின் பாடத்திட்டங்களில் 'கிறிஸ்தவக் கலை' என்பது கற்பிக்கப்பட, கற்கப்பட வேண்டிய மையக் கற்கைநெறிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆயினும், அக்கற்கையை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய கிறிஸ்தவ சிற்ப, கட்டடக்கலைகள் தொடர்பான குறிப்புக்கள் இலகுவில் தமிழில் கிடைப்பதில்லை. இப்பின்னணியில் இவ் ஆய்வு நூலானது, அவர்களின் கல்வித் தேவைக்குப் பெரிதும் உதவும் என்னும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நூலில் கலை சார்ந்த குறிப்புக்களை ஒரு வரலாற்றுப் பார்வையிலும் நோக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில், கலை பற்றிய பொதுவான அறிமுக விளக்கமும், தொடர்ந்து சிற்ப, கட்டடக்கலைகள் குறித்த ஒரு அறிமுக வரலாற்றுப் பார்வையும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே நூலில் இடம்பெறும் முதல் மூன்றுப் பகுதிகள் கலை சார்ந்த கற்கைகளில் ஆர்வமுடையவர்களுக்கும், கலை சார்ந்த ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் ஓரளவு உதவியாக அமையும்.

மேலும் கிறிஸ்தவ கலை சார்ந்த பாடப்பரப்பில், கிறிஸ்தவ கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் சிறந்த ஊடகமாகக் கலையின் வகிபாகம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை மையப்படுத்தி நோக்கும் போது, கலைப் பொருட்களின் கலையம்சங்களைத் தவிர்த்து கற்பது, கற்பிப்பது கடினம். எனவே கட்டடம், சிற்பம், ஓவியம் என்பவற்றை கற்கும் போது, அதன் அடிப்படையான கலையம்சங்களைப் பற்றிய அறிவுடன் அவற்றை அணுக வேண்டும். இதனை நோக்காகக் கொண்டு, நூலில் கிறிஸ்தவ சிற்ப, கட்டடக்கலைகளின் தோற்றம், அவற்றின் வளர்ச்சி குறித்த மேலோட்டமான அறிமுக விளக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கென குறித்த கலையம்சங்களுக்குப் பொருத்தமான படங்களும் வழங்கப்பட்டுள்ளன.

நூலில் இறுதியாகக் காணப்படும் இரு பெரும் பகுதிகளும் நூலின் தலைப்பைப் பிரதானப்படுத்தி, திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள சிற்ப, கட்டடக்கலையம்சங்களை எடுத்துரைத்துள்ளன. இப்பகுதியில் வழங்கப்படும் படங்கள் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் விளக்கங்களுக்கு அமைய இணையத்தளம் மூலம் பெறப்பட்ட விளக்கப் படங்களாகும். படங்களினூடாக மேலதிகத் தெளிவு வாசகர்களுக்கு கிடைக்க வேண்டும் என்னும் நோக்கில் அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

இறைவெளிப்பாட்டின் பதிவேடாகிய திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள கலைகள் யூத, கிறிஸ்தவத்தின் ஆரம்ப வரலாற்றையும் பண்பாட்டையும் பதிவு செய்துள்ளன. 'ஒரு கடவுட் கோட்பாட்டை' மையப்படுத்திய, வெளிப்படுத்தப்பட்ட சமயங்களாகிய யூத, கிறிஸ்தவ சமயங்களின் சமய நம்பிக்கையின் அடிப்படையாக விளங்கும் திருவிவிலியத்தில், சிற்பக் கலையம்சங்களையும் காணக் கூடியதாயுள்ளது. அந்த வகையில் சிற்ப, கட்டடக்கலையம்சங்களின் இறையியல் மற்றும் ஆன்மீகப் பயன்பாடு என்பவற்றை வெளிக் கொணர்ந்து, ஆவணப்படுத்தும் நூலாக இந்நூல் அமையும்.

✧ ✧ ✧

நூலின் பிரதான பகுதியான விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுக் குறிப்புக்களுக்கான தெளிவாக்கங்களுக்கும், மேலும் எபிரேய, கிரேக்கச் சொற்பதங்களின் உச்சரிப்பு மற்றும் அவற்றின் விளக்கங்களுக்கும், நூலின் அட்டைப்பட விளக்கத்திற்கும் பெரிதும் உதவி, வழிகாட்டிய அருட்தந்தை ஜெகன்குமார் கூஞ்ஞ அடிகளாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூலின் அச்சுப்பதிப்பிற்கு உதவிய நியூ எவகிறீன் பிறின்டேர்ஸ் (Pvt) Ltd பணியாளர்களுக்கும், இந்நூலை வெளியீடு செய்கின்ற நல்லாயன் நிலையத்தினருக்கும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீக பணியகம்) எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

✧ ✧ ✧

எனது கல்வி பயணத்தின்போது எனக்குப் பக்கபலமாக இருந்து தகுந்த வழிகாட்டல்கள், பாதுகாப்பு, உற்சாகம் அனைத்தையும் வழங்கி, கல்வித் துறையில் முன்னோக்கிச் செல்ல உதவிய எனது அன்பான தந்தைக்கு பணிவன்பான நன்றியைத் தெரிவிக்கும் நோக்குடன் இந்நூலைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேரி வினிபிரிடா. எஸ்
விரிவுரையாளர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.